# தமிழ் நாடு வருவாய்த் துறை

# திருவள்ளூர் மாவட்டம்

# பூவிருந்தவல்லி வட்டம்

## அறிவிக்கை (Notification)

**கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

(பத்திரிக்கைச் செய்தி மூலம், திருவள்ளூர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கோப்புஎண் நக.அ1/25627/2020, நாள் 10.02.2021-ன்படி கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ள நிகழ்வு நிர்வாககாரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ளது)

திருவள்ளூர் மாவட்டத்தில் கீழ்கண்டுள்ளவாறு, வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் அடங்கிய கிராமங்களுக்கு கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தகுதியான விண்ணதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கிராமஉதவியாளர் - இரண்டு (02) காலிப்பணியிடங்கள்

| வ. எண் | வருவாய் வட்டத்தின் பெயர் | கிராமஉதவியாளர் பணியிடம் காலியாகஉள்ளவருவய் கிராமத்தின் பெயர் | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1) | பூவிருந்தவல்லி | அகரமேல் | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC) | BC (G) |
| 2) | | மேப்பூர் | பொது (General) | General (G) |

**தகுதிகள்:-**

1) காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.
2) தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட கிராமத்தில் இல்லாவிட்டால் அக்கிராமத்தின் எல்லையை ஒட்டிய கிராமத்திலிருந்து விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

| இனம் | வயது (01.01.2022அன்று) | கல்வித் தகுதி |
|---|---|---|
| பொதுப் பிரிவினர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2022 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும் சீர்மரபினர்)/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2022 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |
| அரசுபணிகளில் நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பினை இரண்டு ஆண்டுகள் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. | | |

## நிபந்தனைகள்

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமைசான்று ஆகியவைகளை கண்டிப்பாக இணைத்தல் வேண்டும்.

2) மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

3) விண்ணப்பதாரர்கள் பூவிருந்தவல்லி வட்டத்தினைச் சேர்ந்தவர்களாகவும், அதேவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4) இன சுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5) ஒவ்வொரு கிராம உதவியாளர் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

6) அரசுவிதிகளின்படி இன சுழற்சிமுறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்

7) கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் நேரிலும் மற்றும் இணையதளத்திலும் 20.01.2022 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

தேர்வுசெய்யப்படும் நபர்களுக்கு Special Time Scales of Pay Matrix Level 6 (Minimum Rs.11,100/- Maximum Rs.35,100/-) ஊதிய ஏற்ற முறையில் அடிப்படை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியர் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 20.01.2022 (வியாழக்கிழமை) பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும். இந்த தேதிக்கு பின்னர் காலம் கடந்துவரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் (Call Letter) அனுப்பிவைக்கப்படும்.

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்பபடிவம் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறிவழிகாட்டு மைய இணையதள (National Career Service Portal) திருவள்ளூர் மாவட்ட இணையதள tiruvallur.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பத்திரிக்கைச் செய்தி மூலம், திருவள்ளூர், மாவட்டஆட்சியர் அலுவலக கோப்புஎண் நக.அ1/25627/2020, நாள்:10.02.2021-ன்படி கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ள நிகழ்வு நிர்வாககாரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. அப்போது பெறப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது பெறப்படும் விண்ணப்பங்களுடன் சேர்த்து தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும். ஏற்கெனவே பெறப்பட்ட 621 எண்ணிக்கையிலான விண்ணப்பங்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வட்டாட்சியர்,
பூவிருந்தவல்லி.

## திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம்
## கிராம உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரர் புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் பெயர்/கணவர் பெயர் | : | |
| 3. | இருப்பிட முகவரி | : | |
| 4. | கைப்பேசி எண் | : | |
| 5. | பிறந்த தேதி மற்றும் வயது (01.01.2022 அன்றய தினத்தில்) | : | |
| 6. | சாதி / மதம் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | ஆதார் எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | குடும்ப அட்டை எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9. | கல்வித்தகுதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 10. | இருப்பிட சான்று (சன்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11. | மாவட்ட வேலைவாய்ப்பு பதிவெண் (பதிவு செய்யப்பட்டிருப்பின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |

நாள்:

இடம்:

விண்ணப்பதாரர் கையொப்பம்